225

பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. இரா. வாழவந்தான், பி.,இ.

ந.க.எண்.733/2019 சேம–3 நாள்.13.08.2019

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு வட்டம் – எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் – மருக்கலாம்பட்டி ஊராட்சி புத்தூர் கிழக்கு கிராமம் – ச.எண். 56/7ஏ, 7சி, 7டி, 8, 9பி, 10, 11–ல் 1.065 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண். 2491/2017/தி1, நாள். 24.12.2018 மற்றும் 08.07.2019.
2. மனுதாரர் திரு. ஆர். செல்வராஜ், நாமக்கல் அவர்களின் விண்ணப்பம் நாள். 06.08.2019 மற்றும் 13.08.2019.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள். 29.04.2019 மற்றும் 08.08.2019.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க. எண். 14619/88/பிசிசி, நாள். 27.04.2014.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண். 40483/00/எல்ஏ1, நாள். 07.11.2002.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண்.7978/2012/எல்ஏ2, நாள். 19.04.2012.
7. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யு.டி.4.2), நாள். 04.06.2004.
8. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
9. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
10. இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, நாமக்கல் அவர்களின் கடித எண். இ4/299/2019, நாள். 08.02.2019.
11. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12201/2017/Spl.Cell, நாள். 28.09.2017.

-------

ஆணை:

பார்வை 1–ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், மருக்கலாம்பட்டி ஊராட்சி, புத்தூர் கிழக்கு கிராமம், ச.எண். 56/7ஏ, 7சி, 7டி, 8, 9பி, 10, 11–ல் 1.065 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான உத்தேசங்கள் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3–ல் சுட்டிய 29.04.2019 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு, பார்வை 1–ல் சுட்டிய கடிதம் நாள். 08.07.2019–ன் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானபத்திரம் எண். 1305/2019, நாள். 24.06.2019 பெறப்பட்டதைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

P. Thillaikarasi

1. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ம.(சே)எண். 880/2019 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

2. மேலும், பார்வை 4 மற்றும் 5 ஆகியவற்றில் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும், எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. பார்வை 6–ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

4. நன்னிலை வரித் தொகை முழுமையாக பார்வை 7 மற்றும் 8–ல் கண்ட அரசாணைகளின் படி முழுமையாகப் பெறப்பட்டு உள்ளது.

5. மனைப்பிரிவு நிபந்தனை எண்.13–ன்படி பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்தவெளி ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதன்படி உள்ளாட்சி நிர்வாக அதிகாரி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும், மனைப்பிரிவு நிபந்தனை 16(இ), 16(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் அனைத்து (Quality of Roads) உள்ளாட்சியின் தரத்திற்கேற்ப தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி சான்று பெற்ற பின்னரே உத்தேச மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

7. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 16(ஈ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u>

தற்போது உள்ளாட்சியில் ஒப்படைத்துள்ள 25.333 ச.மீ. மின் உபயோக நிலத்தினை கண்காணிப்பு பொறியாளர், TANGEDCO, நாமக்கல் அவர்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

P. Thillakara

229

செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம், சேலம்.

**இணைப்பு**
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் (2 நகல்கள்)

**பெறுநர்**
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
மருக்கலாம்பட்டி ஊராட்சி,
எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

**நகல்**

1. திரு ஆர். செல்வராஜ்,
த/பெ. ராமசாமி,
2/102ஏ, மெயின் ரோடு,
வேலக்கவுண்டன்பட்டி,
நாமக்கல்.
2. Stock File (வரைபடம் –1 மற்றும் நிபந்தனைகள் படிவம் –1)
3. கோப்பு (வரைபடம் –1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1.

P. Thillakam

தனி அலுவலர், மருக்கலாம்பட்டி ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
எலச்சிபாளையம் வட்டாரம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திரு. தி. சரவணன்

241

ந.க.எண். 2491/2017 நாள் – 30 .08.2019

பொருள் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் – நாமக்கல் மாவட்டம் – எலச்சிபாளையம் வட்டாரம் – மருக்கலாம்பட்டி ஊராட்சி – புத்தூர் கிழக்கு கிராமம் சர்வே எண். 56/7A,7C,7D,8,9B,10,11 இதில் 1.065 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனைகளுக்கு மனைப்பிரிவு ம.வ/ம(சே) எண். 880/2019க்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. வேலகவுண்டம்பட்டி சார்பதிவக தானபத்திர ஆவண எண்.1305/2019.
2. நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களின் கடிதம், ந.க.எண்.733/2019/சேம–3, நாள் – 13.08.2019
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 24.12.2018 மற்றும் 08.07.2019.
4. ஆரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள். 04.05.2017
5. ஊராட்சி தீர்மான எண்.2/26, நாள். 17.08.2019.
6. பாரத ஸ்டேட் வங்கி நாமக்கல் கிளை சலான் எண். 04/நாள். 30.08.2019 தொகை ரூ.1300/–

*******

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம், மருக்கலாம்பட்டி ஊராட்சி, புத்தூர் கிழக்கு கிராமம் சர்வே எண். 56/7A,7C,7D,8,9B,10,11 இதில் 1.065 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 18 மனைகளைக் கொண்ட மனைப்பிரிவிற்கு ம.வ/ம(சே) எண். 880/2019க்கு பார்வை 2 இல் கண்டுள்ளவாறு நகர் ஊராமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களது கடிதத்தின் மூலம் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு தானமாக வழங்கப்படவேண்டிய இடங்களை ஊராட்சியின் பெயருக்கு மாற்றி பார்வை 1 இல் கண்டுள்ளவாறு பத்திர பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 5 இல் கண்டுள்ள தீர்மானத்தின்படி உரிய கட்டணங்கள் வசூல் செய்து இறுதி ஒப்புதல் வழங்கிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களாது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நில பயன்மாற்றக்கட்டணம் உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குறிய செலுத்துச்சீட்டு பார்வை 6 இல் கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது. ஆகவே பார்வை 2 இல் கண்டுள்ள நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர், சேலம் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும் இத்துடன் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள 26 நிபந்தனைகளுக்குட்பட்டும் இம்மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அங்கீகார இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தனி அலுவலர்,
மருக்கலாம்பட்டி கிராம ஊராட்சி,
எலச்சிபாளையம் வட்டாரம்.

பெறுநர்

திரு. ஆர். செல்வராஜ், வேலகவுண்டம்பட்டி, நாமக்கல்.

நகல்–

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சேலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர் வேலகவுண்டம்பட்டி, நாமக்கல் மாவட்டம்.
3. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், நாமக்கல்.

P. Thillaikarasu